**ஜனவரி - 16**

**"ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள்." - ரோம 12:12**

கிறிஸ்துவின் உடன் சீஷர்களே, ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருத்தல், எப்பொழுதும் ஜெபம் செய்தல், அதாவது எந்த சமயத்திலும், எவ்விடத்திலும் நம்முடைய இருதயத்தையும், மனதையும் தேவனுக்கு ஏறெடுக்கவும், இவ்விதமாக ஒவ்வொருநாளும், ஒவ்வொருமணியும் பிதாவும் நம்முடைய பிரிய கர்த்தராகிய யேசுவும் நம்மோடிருக்கிறார்கள் என்று உணர்ந்து கொள்ளுவது நம்முடைய எவ்வளவு பாக்கியமான சிலாக்கியமாயிருக்கிறது! பிறகு, அவருடைய கண்களுக்கும் மேற்பார்வைக்கும் அடியில் நாளுக்குரிய வேலைகளை சுறுசுறுப்புடன் செய்து நிறைவேற்றியபோதும், அல்லது ஆத்துமா அதன் அவசியத்தை உணரும் சமயத்திலும், நம்முடைய பிரேத்தியேகமான அறையில் நாம் பிரவேசிக்கவும், அங்கே தேவனோடு தனிமையில், நம்முடைய மனதிலுள்ள பாரத்தை இறக்கவும் நமக்குள்ள சிலாக்கியம் எவ்வளவு மிகவும் மதிப்புள்ளதாயிருக்கிறது. **- Z ’95, 215 (R 1864).**

ஜெபம், தேவனோடு மனுஷன் கொண்டுள்ள ஐக்கியமாகும். மனிதரைப் போலல்லாமல், தேவன் தம்மிடம் வருகிற விசுவாசியின் சார்பாகத் தளர்ச்சியடைவதில்லை. ஆகையால் விசுவாசிகள் எப்பொழுதும் யேசுவின் நாமத்தில் ஜெபத்தின் மூலமாகத் தேவனிடத்தில் கிட்ட நெருங்க முடியும். ஆகையால், எப்படிப்பட்ட நன்றியுள்ள இருதயத்தோடு எப்பொழுதும் இந்த சிலாக்கியத்தை உயர்வாக மதிக்கவும் உபயோகிக்கவும் வேண்டும்! நம்மை உயர்த்தவும், வேறு விதமாகக் கிடைக்கக்கூடாத ஆசிர்வாதங்களை நாம் பெற்றுக்கொள்ளவும் அது உதவும். இந்த ஆசீர்வாதங்கள் இரண்டு வகையானதாக இருக்கும். (1) ஜெபிக்கும் ஆவியை அப்பியாசிப்பதிலிருந்து கிடைக்கிற ஆசிர்வாதம். அதாவது தானாகவே ஜெபத்தில் ஈடுபடக்கூடிய நிலையை அடைதல். (அனிச்சை செயல்) (2) ஜெபத்திற்கு உத்தரவாகக் கிடைக்கிற ஈவுகள். **-P ’30, 14.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**லூக் 18:1-8; 1தெச 5:17; கொலோ 4:2; எபே 6:18,19; அப் 12:5; 2:42; சங் 27:8; 145:18; நீதி 15:8; ஏசா 55:6; மத் 6:5-15; 7:7,8; 1தீமோ 2:8; யாக் 5:16; யூதா 20.**

**கோபுர வாசிப்பு : Z ’15, 182 (R 5707).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் ஜெபத்தில் உறுதியாய்த் தரித்திருந்தேனா? ஏன்? எப்படி? எங்கே?**